# அரசாங்க சேவைகள் ஆணைக்குழு
## தொழில் திணைக்களத்தில் (III ஆம் வகுப்பிற்கான ) உதவி தொழில் ஆணையாளர் (திணைக்களம்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை –2021

தொழில் திணைக்களத்தில் பதவி நிலைச் சேவையின் III ஆம் வகுப்பிற்கான உதவி தொழில் ஆணையாளர் (திணைக்களம்) பதவிக்கு 2021.03.31 இல் உள்ள 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு, இத் திணைக்களத்தின், I ஆம் வகுப்பைச் சேர்ந்த தொழில் அலுவலர்களிலிருந்து நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புக்கமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக உரிய விண்ணப்பங்கள் கீழே தரப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளை , இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை. என்ற முகவரிக்கு, பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “தொழில் திணைக்களத்தில் பதவிநிலைச் சேவையின் III ஆம் வகுப்பிற்கான உதவி தொழில் ஆணையாளர் (திணைக்களம்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ” எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும், பரீட்சையின் பெயரானது சிங்கள மொழியிலான விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழியிலான விண்ணப்பத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம் 2021 /11/ 30 ஆந் திகதி ஆகும். பரீட்சை நடை பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

குறிப்பு : விண்ணப்பப்படிவம் அல்லது அதனோடு தொடர்புள்ள ஏதேனும் ஆவணங்கள் தபாலில் காணாமற்போதல் அல்லது தாமதித்துக் கிடைத்தல் சம்பந்தமான முறைப்பாடுகள் எவையும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித்தினம் வரை விண்ணப்பப்படிவம் அனுப்பப் படுவதைத் தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

### 01. சேவையில் சேர்த்துக்கொள்ளும் முறை

எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் அவர்களது சேவைக் காலம் தொடர்பான புள்ளிகள் வழங்கும் பொருட்டு அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும் என்பதுடன், எழுத்துப் பரீட்சை மற்றும் அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெறும் புள்ளிகள் சேர்க்கப்பட்டு பெறப்படும் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள், வெற்றிடங்களுக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

நியமிக்கப்படுவோரின் எண்ணிக்கை மற்றும் நியமனத் திகதி ஆகியன அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு அமையத் தீர்மானிக்கப்படும்.

### 02. சம்பள அளவு

*அரச நிருவாகச் சுற்றறிக்கை இல. 03/2016 இல் SL-1-2016 சம்பளப் பிரிவின் பிரகாரம் இப்பதவிக்கு ரூ. 47,615/- – 10 X 1335 – 8 X 1630 – 17 X 2170 – 110,895/- என்ற மாதாந்த சம்பள அளவுத் திட்டம் உரித்தானது.*

03. **சேவையில் இணைக்கப்படுவதற்கான நிபந்தனைகள்**

i. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்தைக் கொண்டதுமாகும். விதவைகள் / தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத்துக்குரிய பங்களிப்புச் செய்யப்படல் வேண்டும்.

ii. இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் அலுவலர்களுக்கு ஒரு வருட காலம் பதில் கடமைக்கு உரியதாகும்.

iii. மொழிகள் தொடர்பாக தேர்ச்சி தொடர்பில், இல. 18/2020 மற்றும் 2020.10.16 ஆம் திகதியையுமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்பான சுற்று நிருபங்கள் மேலோங்கி நிற்கும்.

iv. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்குவிதிகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் ஆகியவற்றுக்கு இந்த நியமனங்கள் உட்பட்டவையாகும்.

04. **தகைமைகள்**

4.1 கல்வித் தகைமைகள்

தொழில் அலுவலர் பதவி I ஆம் வகுப்பைச் அலுவலர்களிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதால் கல்வித் தகைமைகள் ஏற்புடையாகாது.

4.2 உயர் கல்வித் தகைமைகள்

ஏற்புடையதாகாது.

4.3 அனுபவம்

தொழில் அலுவலர் பதவியில் 10 வருட காலத்திற்குத் செயற்திறனுடையதும் மற்றும் திருப்திகரமானதுமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் I ஆம் வகுப்பைச் சேர்ந்த தொழில் அலுவலராக இருத்தல்.

05. **உடற் தகுதி**

சகல விண்ணப்பதாரிகளும் சகல விதங்களிலும் உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கு ஏற்றவராயிருத்தல் வேண்டும்.

06. **வயதெல்லை**

I ஆம் வகுப்பைச் சேர்ந்த தொழில் அலுவலர்களிடமிருந்து மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதால் வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

07. **வேறு தகைமைகள்**

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

iii. சகல விண்ண்பதாரிகளும் தொழில் அலுவலர் பதவியில் நிரந்தரமாக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

iv. தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தினத்திற்கு முன்னைய ஐந்து (05) வருட காலத்தினுள் திருப்திகரமான அல்லது

அதற்குக் கூடிய மட்டத்தில் செயற்றிறன் மதிப்பீட்டைப் பெற்றிருத்தல் வேண்டும்.

v. பரிந்துரைக்கப்பட்டுள்ள உரிய தடை தாண்டல் பரீட்சைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

vi. விண்ணப்பத்தைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் தினத்தன்று, பதவியில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

vii. பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 01/2020 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுங்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டிருத்தலாகாது.

**08.** **8.1 எழுத்துப் பரீட்சை**

8.1.1 இந்தப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| | விடயம் | காலம் (மணித்தியாலங்கள்) | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | தொழில் சட்டங்கள் | 03 | 100 | 40 |
| 02. | பொது நுண்ணறிவு | 01 | 100 | 40 |
| 01. | முகாமைத்துவ பொதுஉளச்சார்பு | 02 | 100 | 40 |

**8.1.2 பாட விதானம்**

| | **வினாப்பத்திரத்தின் பெயர்** | **பாட விதானம்** |
|---|---|---|
| 01. | தொழில் சட்டங்கள் | பின்வரும் சட்டங்கள் மற்றும் கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.<br>1941 இன் 27 ஆம் இலக்க சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டம்<br>1950 இன் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்<br>1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் |

| | | |
|---|---|---|
| | | 1971 இன் 45 ஆம் இலக்க சேவைகள் முடிவுறுத்தல் சட்டம்<br><br>1935 இன் 14 ஆம் இலக்க தொழிற்சங்கக் கட்டளைச் சட்டம்<br><br>1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்<br><br>1956 இன் 47 ஆம் இலக்க பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் சட்டம்<br><br>1954 இன் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டம்<br><br>1939 இன் 32 ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம்<br><br>1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம்<br><br>1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம்<br><br>1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் |
| 02. | பொது நுண்ணறிவு | சொற்கள், கணித ரீதியான மற்றும் உருவ அமைப்பிலான வடிவங்கள் ஆகியவற்றினூடாக முன்வைக்கப்படும் பிரச்சினைகள் பற்றிய பரீட்சார்த்தியின் தீர்மானங்கள் மற்றும் பிரதிபலிப்புகள் என்பவற்றைப் பரீட்சித்துப் பார்ப்பதனூடாக, பரீட்சார்த்தியின் விளங்கிக்கொள்ளும் திறனையும் அறிவையும் அளவிடுவது இங்கு எதிர்பார்க்கப்படும். |
| 03 | முகாமைத்துவத்திற்கான பொதுஉளச்சார்பு | பிரச்சினைகளையும் அவற்றுக்கான காரணங்களையும் கண்டறிதல், தீர்மானங்களை எடுத்தல், உள்ளக ரீதியான தனியாள் தொடர்புகளைப் பேணுதல், தொடர்பாடலிலுள்ள திறமைகள், சுய ஒழுக்காற்றுக் கொள்கைகள், மற்றும் தந்திரோபாய வழிமுறைகள் போன்ற விடயங்கள் வாயிலாக பரீட்சார்த்திக்கு இருக்க வேண்டிய மேலான முகாமைத்துவத் திறமையைக் கொண்டு, அவருக்குத் தரப்படும் நிகழ்வுகள் மற்றும் சந்தர்ப்பங்களுக்கேற்ப |

| | | |
|---|---|---|
| | | முடிவுகளை எடுத்தல் ஆகியன இங்கு எதிர்பார்க்கப்படும். |

8.2 **நேர்முகப்பரீட்சை**

| **புள்ளிகளைப் பெறுவதற்கான முக்கிய தலைப்புகள்** | **ஆகக்கூடிய புள்ளிகள்** | **தெரிவுக்கான அதிகுறைந்த புள்ளிகள்** |
|---|---|---|
| மேலதிக அனுபவம்<br><br>விண்ணபத்தைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் தினத்தன்று விண்ணபத்தின் 4.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகமைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 01/2019 இன் பிரகாரம் மேலதிக செயற்திறனடையதும், திருப்திகரமானதுமான சேவைக் காலத்திற்குப் புள்ளிகள் வழங்கப்படும். அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி செயற்திறனடையதும், திருப்திகரமானதுமான அதிகூடிய சேவைக் காலத்தைக் கொண்ட பரீட்சார்த்திக்கு அதி கூடிய புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன் மற்றைய பரீட்சார்த்திகளுக்கு விகிதாசாரப்படி புள்ளிகள் வழங்கப்படும். | 100 | ஏற்புடையதல்ல |
| மொத்தம் | 100 | |

8.2.1 அமைப்பு முறையிலான நேர்முகப்பரீட்சை

எழுத்துப் பரீட்சையில் மட்டும் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் குழுவினரால் பொது நேர்முகப் பரீட்சைக் மற்றும் அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

எழுத்துப் பரீட்சையில் மற்றும் அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை ஆகிய இரண்டிலும் பெறும் மொத்தப் புள்ளிகளில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுவோர் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து நியமிக்கப்படுவர்.

**குறிப்பு** : நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதனால் அது நியமனத்திற்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் கொண்டுள்ளதாகக் கருதப்பட மாட்டாது.

8.2.2 பொது நேர்முகப்பரீட்சை (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

ஆட் சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட மற்றும் அறிவித்தலில் குறிப்பிப்பட்ட தகைமைகளைப் பரீடசார்த்தி கொண்டுள்ளாரா என்பதனைப் பரீட்சிப்பதற்கே இப்பரீட்சை நடைபெறும். இந்நேர்முகப்பரீட்சையில் பரீட்சார்த்தி உடல் தகைமையைக் கொண்டுள்ளாரா என்பதும் பரீட்சிக்கப்படும்.

**09 . பரீட்சை நிபந்தனைகள்**

i. பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கொழும்பில் உள்ள பரீடசை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணபதாரி விரும்பும் ஒரு மொழியில் மாத்திரம் தோற்ற முடியும். விண்ணப்பதாரிகள் இந்தப் பரீட்சையின் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரம் விடையளிக்க வேண்டும். விண்ணப்பதாரி தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. சகல விண்ணப்பதாரிகளும் வினாப்பத்திரங்கள் மூன்றுக்கும் விடையளித்தல் வேண்டும்.

ii. பரீட்சைக் கட்டணம் ரூ. 1200/- ஆகும். பரீட்சைக் கட்டணமானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு செலுத்தப்படத்தக்க வகையில் தீவிலுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்தில் / மாவட்டச் செயலகம் / பிரதேசச் செயலகம் ஒன்றில் கொடுப்பனவு செய்யப்பட்டு, விண்ணப்பதாரியின் பெயரில் பெறப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில், அகற்றப்பட முடியாத வகையில் ஒட்டப்பட வேண்டும். அதன் புகைப்படப் பிரதி ஒன்றையும் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

iii. காசு கட்டளை அல்லது முத்திரை பரீட்சை தொடர்பாகச் செலுத்தப்படும் கட்டணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. செலுத்தப்பட்ட பரீடசைக் கட்டணமானது எவ்வித நிலமைகளின் கீழும் மீளச் செலுத்தப்பட முடியாது.

iv. முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் இல்லாது பரீட்சை நிலையத்துக்குள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கப்படும் தினத்தன்று பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம், தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தியவாறான அனுமதிப் பத்திரம் மாத்திரமே விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதால், அவர் அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அல்லது பதவிக்குத் தேதவையான தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

v. விண்ணப்பப் படிவமானது 22 – 29 ச.மீ. அளவுள்ள A4 தாளில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், 1 முதல் 07 வரையான தலைப்புகள் அதன் முதல் பக்கத்திலும், 08 முதல் 11.5 வரையான தலைப்புகள் அதன் இரண்டாவது பக்கத்திலும், 12 முதல் 14 வரையானவை மூன்றாவது பக்கத்திலும் மீதமாக உள்ளன நான்காம் பக்கத்திலும் வரத்தக்கவாறு தயாரிக்கப்பட வேண்டும். உரிய தகவல்கள் தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்ததாக இல்லாத மற்றும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை விண்ணப்பதாரி தம்முடன் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.) பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப் படிவம் பரீட்சைக்கான அறிவித்தலின் பிரகாரம் தரப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்ததென விண்ணப்பதாரியால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதால், அவ்வாறு இல்லாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் அறியத்தருகிறேன். தயவுசெய்து இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பத்தைத் தயாரிக்கவும்.

vi. வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளால், உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பரிந்துரைக்கப்பட்ட முறையில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணப் பற்றுச் சீட்டுடன் விண்ணப்படிவம் ஏற்கப்படும் முடிவு திகதியன்றோ அல்லது அத்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் உரிய நேரத்தில் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குரிய அனுமதிப் பத்திரம் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டதும், உடனடியாக அது, செய்தித்தாள்கள் மற்றும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் அலுவலக இணையத்தளத்திலும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் அறிவித்தலாக வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களுள் அனுமதிப் பத்திரம் கிடைக்காவிட்டால் அவ்விண்ணப்பதாரர், அவ்வறிவித்தலின் பிரகாரம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அதனை அறிவிக்கும்போது, தம்வசம் வைத்துள்ள விண்ணப்பத்தின் பிரதியின் பிரதி, உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் பதிவுத்தபால் பற்றுச் சீட்டு பிரதி பரீட்சைத் திணைக்களத்தால் உறுதிப்படுத்தத் வேண்டுகோள் விடுக்கப்படின் ஏதாவது தகவல் என்பவற்றையும் தம்வசம் வைத்திருத்தல் அனுகூலமாக அமையும்.

vii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது அங்கீகாரத்தின் பிரகாரம் பரீட்சையைப் பிற்போடுவதற்கு அல்லது செல்லுபடியற்றதாக்குவதற்கு, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

viii. பரீட்சையை நடாத்துவது மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை வழங்குதல் குறித்து , பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அச்சட்ட ஒழுங்குகள் ஓர் பரீட்சார்த்தியால் மீறப்படுமாயின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அப்பரீட்சார்த்தி ஆளாக வேண்டியிருக்கும்.

ix. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்** :

பரீட்சை நிலையப் பொறுப்பாளரின் முன்னிலையில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது ஆளடையாளத்தை உறுதிப் படுத்த வேண்டும். அதற்காகக் கீழ் வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க முடியும்.

அ. தேசிய அடையாள அட்டை
ஆ. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
இ. செல்லுபடியாகும் வாகன அனுமதிப்பத்திரம்

மேலும், அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு முகம் காதுகள் என்பவற்றை மூடாது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதை நிராகரிக்கும் பரீட்சார்த்தி பரீடசை மண்டபத்துள் உட்பிவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார். பரீடசை மண்டபத்தை விட்டு வெளியேறும் வரை பரீட்சார்த்தி முகத்தையும் காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

குறிப்பு :

(i) விண்ணப்பப் படிவத்துடன் ஏதேனும் ஆவணங்கள் அல்லது அவற்றின் பிரதிகள் இணைக்கப்படலாகாது.

(ii) தேவைப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(iii) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தினை தொழில் ஆணையாளர் அதிபதியினூடாக பரீட்சை ஆணையாளர் அதிபதிக்கு அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தமது கையொப்பத்தை தாம் கடமை புரியும் பிரிவு /அலுவலக தலைவரால் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

10. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயற்பாட்டு ஒழுங்கு விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்சவைகள் தொடர்பாக வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் மற்றும் தொழில் திணைக்கத்தின் பதவி நிலைச் சேவை வகைக்குரிய பதவிக்கு ஆட்சேர்ப்புச் திட்டத்திற்கென அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 2013/03/ 07 ஆந் திகதிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் என்பன இதன் பின்னர் இப்பதவிக்கு ஏற்படையதாகும்.

11. இவ் அறிவித்தல் வழங்காத எந்தவொரு விடயத்திற்கும் பொதுச் சேசவைகள் ஆணைக்குழு முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

12. இந்த அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டாலும் அவற்றிடையே ஏதாவது முரண்பாடுகள் காணப்படும் போது, சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி.

ஒப்பமிடப்பட்டது எம் பீ டி யு கே மாபா பத்திரான
செயலாளர்
தொழில் அமைச்சு

திகதி 01 /11 / 2021

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**
**தொழில் திணைக்களத்தில் பதவிநிலைச் சேவையின்( III ஆம் வகுப்பு )**
**உதவி தொழில் ஆணையாளர் (திணைக்களம்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான**
**மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீடசை- 2021**

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமே விண்ணப்பம் நிரப்பப்படுதல் வேண்டும்.

02. தனிப்பட்ட தகவல்கள்

2.1. விண்ணப்பதாரியின் பெயர், முதலெழுத்துக்களுடன் : ..........................................
(ஆங்கில தனித்தனி பெரிய எழுத்துக்களில்) உதாரணம்: GUNAWARDHANA, M.G.B.S.K.

2.2. முழுப்பெயர் : ..............................................................................
(ஆங்கில தனித்தனி பெரிய எழுத்துக்களில்)

2.3. முழுப்பெயர் : ..............................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

03. முகவரி

3.1. அலுவலக முகவரி : ..............................................................................
(ஆங்கில தனித்தனி பெரிய எழுத்துக்களில்) ..................................................
(இந்த முகவரிக்கே பரீட்சை அனுமதி அட்டை தபாலில் அனுப்பப்படும்)

3.2. அலுவலக முகவரி : ..............................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

3.3. தனிப்பட்ட முகவரி : ..............................................................................
(சிங்களத்தில் / தமிழில்) ..................................................

04. பெண் / ஆண் : ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

05. தேசிய அடையாள அட்டை இல.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

06.தொலைபேசி இல.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

07. விவாக நிலை (விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

08.தேசிய இனம்

(சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத்தமிழர்-3, முஸ்லிம் - 4, ஏனையவர் -5)

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக) [ ]

09. 9.1 பிறந்த திகதி. - வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

9.2. 30/11/2021 .இல் வயது -வருடம் [ | ] மாதம் [ | ] நாள் [ | ]

10. 10.1 தொழில் அலுவலர் பதவியின் II ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட திகதி :

வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

10.2 தொழில் அலுவலர் பதவியின் I ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட திகதி :

வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

10.3 2021/11/30 ஆம் திகதியன்று தொழில் அலுவலர் பதவியின் I ஆம் வகுப்பில் சேவைக் காலம்

வருடம் [ | ] மாதம் [ | ] நாள் [ | ]

10.4 2021/11/30. ஆம் திகதியன்று தொழில் அலுவலர் பதவியின் முழு சேவைக் காலம்

வருடம் [ | ] மாதம் [ | ] நாள் [ | ]

10.5 2021/11/30 ஆம் திகதியன்று தொழில் அலுவலர் பதவியின் 10 வருடசெயற்திறன் மிக்கதும் மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா? ..........................................................................................

10.6 2021/11/30. ஆம் திகதிக்கு நேர் முந்திய 05 வருட சம்பள ஏற்றங்கள் உழைத்துப் பெறப்பட்டுள்ளனவா? ..........................................................................................

10.7 2021/11/30 ஆம் திகதிக்கு நேர் முந்திய 05 வருட காலத்தினுள் எச்சரிக்கை தவிர்ந்த தண்டனை ஏதும் பெற்றிருந்தால், அது பற்றிய விபரங்கள்..........................................................................................

..........................................................................................

11. சித்தியடைந்த அதியுயர் பரீட்சை:

பட்டதாரி ஆயின்,

11.1 பட்டத்தின் பெயர் ..........................................................................................

11.2. பல்கலைக்கழகம் / நிறுவனம் ..........................................................................................

11.3 பட்டம் பெற்ற திகதி ..........................................................................................

11.4. பட்டம் செல்லுபடியாகும் திகதி ..........................................................................................

11.5 பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் ..........................................................................................

12. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்
செலுத்திய தொகை ரூ. ..........................................................................
கட்டணம் செலுத்திய அலுவலகம் ..............................................................................................................
செலுத்திய திகதி ..................................................................
பற்றுச்சீட்டு இல. ....................................................................................

| பற்றுச் சீட்டின் ஓரத்தை அகற்றப்பட முடியாத வகையில் ஒட்டுக.<br>(அதன் புகைப்படப் பிரதி ஒன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்) |
|---|

13. விண்ணப்பதாரியின் வெளிப்படுத்துகை :
பந்தி 4.3 இல் உள்ளவாறு, 2021/11./30 ஆம் திகதிக்கு நேர் முந்திய 10 வருட காலம் செயற்றிறன் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவையைப் பூர்த்திசெய்துள்ளேன் என்பதுடன் அக்கால கட்டத்தினுள் (எச்சரிக்கை தவிர்ந்து) வேறு ஒழுக்காற்றுத் தண்டனையொன்றிற்கும் ஆட்பட்டிருக்கவில்லை எனவும் இத்தால் வெளிப்படுத்துகிறேன். மேலும், பரீட்சையை நடாத்துவது மற்றும் முடிவுளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் எடுக்கப்படும் முடிபுகளுக்கு உட்படுவேன் எனவும் மேலும் வெளிப்படுத்துகின்றேன்.

மேலும், இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் பிழையானவை அல்லது பொய்யானவை என, நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், அதன் காரணமாக நான் இப்பதவிக்குத் தகுதியற்றவராவேன் என்பதையும், நான் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால், எவ்வித நட்ட ஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன். மேலும், பரீட்சையை நடாத்துவது குறித்த, பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்

.....................................................................................................

திகதி : ............................ (விண்ணப்பதாரரின் கையொப்பம்)

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்: (அறிவித்தலின் பிரிவுகள் 9 (xi) ஆகியவற்றின் பிரகாரம்)

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ........................................................................................................ (விண்ணப்பதாரியின் முழுப்பெயர்) என்பவரைத் தனிப்பட்ட முறையில் நான் அறிவேன் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் எனவும், ........................................................ ஆகிய திகதியில் அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் சான்றுபடுத்துகிறேன்.

.......................................................................................................

திகதி : ................. (கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரது கையொப்பம்)

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரது முழுப்பெயர்: .......................................................................
பதவி : .....................................................................................................................................................
முகவரி : ...............................................................................................................................................
(அலுவலக பதவி முத்திரை இட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும்)

15. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (விண்ணப்பதாரியின் பெயர்வழிக் கோவையின் பிரகாரம்)

எனது இல. ..................................................

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி .................................................................................................. (விண்ணப்பதாரியின் முழுப்பெயர்) என்பவர் இத் திணைக்களத்தில் .................................................................................................. என்னும் பதவியை .................................................... ஆகிய திகதியிலிருந்து வகிக்கிறார் எனவும், அவர் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடைபெறுகிறது / நடைபெறவில்லை எனவும் சான்றுப்படுத்துகிறேன். மேலும், அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் எனவும் சான்றுப்படுத்தி அவரது விண்ணப்பத்தை சிபார்சு செய்து முன்னளிக்கின்றேன்.

திகதி ........................................................

திணைக்களத் தலைவரது பெயர் ..................................................................................................................

திணைக்களத் தலைவரது கையொப்பம் ..................................................................................................

பதவிப் பெயர் ..................................................................................................................................................

(அலுவலக பதவி முத்திரை)